**கண்டி கடவத்ஸதர மற்றும் கங்கவட கோரளே பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 07 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 28 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 27 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கண்டி கடவத்ஸதர மற்றும் கங்கவட கோரளே பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு தொடர்பாக ரூபா 1,055,442 இற்கான வட்டி வருமானம் வருமானச் செலவுக் கணக்கில் ரூபா 1,001,275 தொகை எனக் கணக்கீடு செய்யப்பட்டமையால் ஆண்டிற்கான வட்டி வருமானம் மற்றும் நிலுவை ஏனைய வருமான மீதி ரூபா 54,167 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) வீதி விளக்கு பொறுப்பாளருடைய மற்றும் நூலகப் பொறுப்பு பெண் அதிகாரியின் 2005 ஆண்டு முதல் 2013 நவம்பர் வரையான காலப் பகுதிக்கான நிலுவை சம்பளக் கொடுப்பனவுகள் மீளாய்வாண்டிற்கான செலவு ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான செலவுகள் ரூபா 294,886 இனால் கணக்குகளில் மிகையாகக் காட்டப்பட்டிருந்தன.

(இ) அம்பிட்டிய புது நிர்மாண தொடர்கட்டிடம் நிர்மாணித்தலுக்கான செயற்திட்டத்தில் தகுதி என தீர்மானிப்பதற்காக தயாரிக்கப்பட்டிருந்த புவிச் சரிதவியல் தொழில்நுட்ப அறிக்கைக்காகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 235,862 தொகை மீளாய்வாண்டிற்கான மூலதன சொத்துக்களில் திருத்தங்கள் மற்றும் பராமரிப்புக்களின் கீழ் மீண்டுவரும் செலவு ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) முன்வரும் வருடத்திற்கான ரூபா 101,516 இற்கான காப்புறுதிச் செலவுகள் மீளாய்வாண்டிற்கான செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) 2012 ஆண்டில் இருந்து முன் கொண்டு வரப்படும் நீர் நுகர்வோரிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 4,861,933 இற்கான நிலுவை நீர்க் கட்டணம் செலுத்த வேண்டிய ரூபா 14,431,712 இற்கான நீர் பாதுகாப்பு வைப்புத் தொகைக்கு பதிலீடு செய்து மீதியான ரூபா 9,569,779 இற்கான மீதியை முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் வருமானத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஊ) 1982-2012 காலப் பகுதி தொடர்பாக கொழும்பு மாவட்டப் பதிவாளர் அலுவலர் அலுவலகத்தில் இருந்து கிடைக்க வேண்டிய ரூபா 35,047,010 இற்கான முத்திரைக் கட்டணப் பெறுமதி ரூபா 35,295,887 தொகை என கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் நிலுவை ஏனைய வருமான மீதி ரூபா 248,877 இனால் மிகையாக் காட்டப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 176,859 தொகை பெறுமதியான நிலையான சொத்துக்கள் கணக்குகளுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) மீளாய்வாண்டின் போது நன்கொடையாக கிடைத்திருந்த ரூபா 164,877 தொகை பெறுமதியான நிலையான சொத்துக்கள் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஐ) பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் காணிகளை துண்டுகளாக பகிர்ந்து விற்பனை செய்யும் போது பொது விடயங்களுக்காக சபைக்கு உரிய 05 காணிகள் தொடர்பாக கிடைத்திருந்த காணித் துண்டின் பெறுமதி மதிப்பீடு செய்து மூலதனப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

08 கணக்கு விடயங்கள் தொடர்பாக கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகள் மற்றும் தொடர்புடைய பட்டோலைகளின் கூட்டுத்தொகையுடன் ஒப்பீடு செய்யும் போது ரூபா 34,158,291 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

1.3.3 பெற வேண்டிய கணக்குகள்

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 119,211,969 ஆக காணப்பட்டதுடன், அவற்றில் 05 வருட காலத்தை மிகைத்திருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 16,199,330 ஆக காணப்பட்டது.

1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கடன்கொடுத்தோர் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 95,070,860 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் ஒரு வருடத்தை விட மிகைத்துள்ள மீதிகளின் பெறுமதி ரூபா 181,619 தொகை என அவதானிக்கப்பட்டது.

1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1987 இன் 15 இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 19. XI | குறிப்பிட்ட விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் பூர்வாங்க அங்கீகாரம் இன்றி, பிரதேச சபையின் காணிகளை குத்தகைக்கு கொடுக்க முடியாது எனினும் பிரதேச சபைக்குச் சொந்தமான 02 காணித் துண்டுகளை ரூபா 70,000 தொகைக்கு குத்தகைக்கு கொடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| நிதிப் பிரமாணங்கள் 371(2) | குறிப்பிட்ட விடயத்திற்கான துணை கட்டுநிதி அது வழங்கப்பட்டுள்ள கருமம் முடிவடைந்தவுடன் தீர்க்கப்பட வேண்டும் எனினும், 11 சந்தர்ப்பங்களில் வழங்கியிருந்த ரூபா 51,326 இற்கான முற்பணங்களை தீர்க்காமல் முன்கொண்டுவரப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (இ) | 1990 அக்டோபர் 10 திகதிய இலக்கம் 41/90 கொண்ட பொது நிருவாக சுற்று நிருபம் | 06 மாதங்களுக்கு ஒரு முறை எரிபொருள் எரிவு பற்றி முறையான பரிசோதனை ஒன்றும், அனைத்து வாகனங்களின் அவற்றின் எரிபொருள் எரிவு தொகையை மதிப்பிடுவதற்காக தகைமையுள்ள பொறியியலாளர்கள் ஒருவர் மூலம் பரிசோதனை ஒன்றும் மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும், சபைக்குச் சொந்தமான வாகனங்களில் அவ்வாறு பரிசோதனை செய்யப்பட்டிருக்கவில்லை. |

2. நிதி மீளாய்வு
---------------------------

2.1 நிதி விளைவுகள்
--------------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 63,030,752 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 35,156,167 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 27,874,585 இற்கான முன்னேற்றம் ஒன்று காணப்பட்டது.

2.2 வருமான நிருவாகம்
----------------------------------

மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 161,245,118 இற்கான நிலுவை வருமானம் ஒன்று அவதானிக்கப்பட்டதுடன் அவற்றில் 2015 ஜூலை 31 திகதி அளவில் ரூபா 159,131,492 இற்கான மீதியொன்று மேலும் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது.

2.3 சுற்றாடல் அனுமதிப் பத்திரக் கட்டணம்
------------------------------------------------------------------

சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ள வேண்டிய 42 வர்த்தக நிலையங்களுக்காக 1980 இன் 47 கொண்ட தேசிய சுற்றாடல் சார் சட்டத்தின் பிரிவு 23(அ) இன் பிரகாரம் வெளியிடப்பட்ட 2008 ஜனவரி 25 திகதிய இலக்கம் 1533/16 கொண்ட அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படாமையால் சபைக்கு கிடைக்க வேண்டிய ரூபா 294,000 இற்கான வருமானத்தை இழந்துள்ளது.

3. செயற்பாட்டு மீளாய்வு
----------------------------------

3.1 முகாமைத்துவத் திறமையின்மை
---------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு ஜனவரி முதல் திசெம்பர் வரை சபையின் அலுவலர்களுக்காக ரூபா 24,536,058 தொகை சம்பளமாக செலுத்தப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 5,244,190 தொகை சம்பள மீளளிப்பு செய்யப்படாமல் சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2014 ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த நூலக புத்தகக் கணிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் அம்பிட்டிய மற்றும் தென்னகும்புர பொது நூலகங்களின் கணிப்பீட்டுக்காக சமர்ப்பிக்கப்படாத முறையே ரூபா 79,359 தொகை பெறுமதியான 462 புத்தகங்கள் மற்றும் ரூபா 25,490 தொகை பெறுமதியான 138 புத்தகங்களுக்கான பற்றாக் குறை விசாரணை பற்றி இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 104 இன் கீழ் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) 2009 ஆண்டின் போது மற்றும் மீளாய்வாண்டின் போது உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சில் இருந்து சபைக்குக் கிடைத்திருந்த இரண்டு கப் வண்டிகள் 2015 ஜூன் 30 திகதி வரை சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.2 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

---

பிரதேச சபை குப்பை முகாமைத்துவத்திற்காக பல வருட காலமாக முறையான செயல்முறை ஒன்றினை கடைபிடித்திருக்கவில்லை. 2014 ஆண்டின் போது பிரதேச சபைகளை வலுப்படுத்தும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் குப்பை முகாமைத்துவத்திற்காக 2014 ஜூன் மாதத்தின் போது ரூபா 1,000,000 இற்கான தொகையொன்று வழங்கியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அந்த செயற்திட்டத்தை அமுல் நடத்தியிருக்கவில்லை.

3.3 பதவியணிக் கடன்

---

பிரதேச சபையில் கடமையாற்றி விட்டு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள, சேவை இடைநிறுத்தப்பட்டுள்ள, ஓய்வு பெற்றுள்ள மற்றும் இறந்துள்ள 31 ஊழியர்களிடம் 10 வருட காலத்தை விட கூடிய காலவீச்சில் அறவிடப்படாமல் காணப்படும் ரூபா 599,712 இற்கான பதவியணிக் கடனை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.4 முறை சாராக் கொடுக்கல் வாங்கல்கள்

---

(அ) 2010 அக்டோபர் 11 திகதிய இலக்கம் எம்ஓஎப்பீ கொண்ட 01/2010/01 நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சுச் செயலாளரின் சுற்று நிருபத்தின் 02(i) மற்றும் 02(iv) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் வெளிநாடு செல்வதற்கு முன்னர் முறைப் பிரகாரம் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். அவ்வாறு செய்யப்படாத சந்தர்ப்பத்தில் வெளிநாடு செல்வதற்காக வழங்கிய படியினை அறவீடு செய்ய வேண்டும். தலைவர் 2014 திசெம்பர் 06 திகதி முதல் 14 திகதி வரை ஜப்பானில் நடைபெற்ற பௌத்த மகாநாடு ஒன்றிற்காக வெளிநாடு செல்வதற்காக பூர்வாங்க அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை. அத்துடன் 2014 திசெம்பர் மாதத்தில் உஷ்ண ஆடைப் படி மற்றும் இடைநேர் படி என ரூபா 75,532 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்த சுற்று நிருப அறிவுரைகளின் பிரகாரம் கணக்காய்வுத் திகதியாகிய 2015 ஜூலை 17 திகதி வரை அமைச்சர்களிடம் அங்கீகாரத்தை பெறுவதற்கு அல்லது குறிப்பிட்ட படியினை திருப்பிச் செலுத்துவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2010 ஆண்டிற்கு முன்னர் பிரதேச சபையின் செலவுக் கடன்கொடுத்தோர் என தொடர்ந்து காணப்படும் ரூபா 6,215,726 இற்கான மீதி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரம் இன்றி 2014 திசெம்பர் மாதம் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் கணக்குகளில் இருந்து பதிவழிக்கப்பட்டுள்ளது.

3.5 ஒப்பந்த நிருவாகம்

---

பிரதேச சபைகளை வலுப்படுத்தும் தேசிய நிகழ்ச்சித் திட்டம்

---

(அ) பொது நிருவாக, உள்ளூராட்சி மற்றும் ஜனநாயக ஆட்சி தொடர்பான அமைச்சரின் மேலதிக செயலாளரின் (அபிவிருத்தி) 2015 ஏப்ரல் 24 திகதிய இலக்கம் PL/3/1/47 கொண்ட கடிதத்தின் மூலம் 2014 ஆண்டிற்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த செயற்திட்டங்கள் 2014 திசெம்பர் 31 திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட வேண்டும். அவ்வாறு வேலை பூர்த்தி செய்வதற்கு முடியாத அனைத்து செயற்திட்டங்களும் அத் திகதிக்குப் பின்னர் செல்லுபடியாகாது என அறிவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு இருக்கும் போது அந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சின் மூலம் 07 செயற்திட்டங்களுக்காக ரூபா 3,000,000 தொகையொன்று சபைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2014 ஆண்டின் போது அவற்றில் ஒரு செயற்திட்டம் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு ரூபா 2,021,775 தொகை ஒன்று மீதியாக இருந்தமையால் இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் எதிர்ப்பார்த்த குறிக்கோள்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 மே 05 திகதிய இலக்கம் 01/2014 கொண்ட மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயலாளரின் சுற்று நிருபத்தின் பிரிவு 05 இன் பிரகாரம் ஒவ்வொரு மாதத்தின் முன்னேற்றம் தொடர்ந்து வரும் மாதத்தின் 05 ஆந் திகதிக்கு முன்னர் உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட வேண்டும். எனினும், அவ் அறிவுரைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.6 மனித வள முகாமைத்துவம்

----------------------------------------------

சபையினால் நீர் வளங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபைக்கு நீர் வழங்கள் விடயம் சாட்டப்பட்டிருந்த போதிலும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் நீர் தொழிலாளர் நீர்மானி வாசிப்பவர் மற்றும் நீர்க் குழாய் பொருத்துனர் ஆகிய பதவிகள் தேவைப்படவில்லை. இது தொடர்பாக மீளாய்வு செய்து சபையின் தேவைக்கு ஏற்ப பதவியணியினை அங்கீகரித்திருக்கவில்லை.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

-----------------------------------------------------------------

4.1 அகக் கணக்காய்வு

---------------------------------

இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 133 மற்றும் 2009 ஜூன் 09 திகதிய இலக்கம் டீஎம்ஏ/2009/01 கொண்ட முகாமைத்துவக் கணக்காய்வு திணைக்களத்தின் பிரகாரம் நிறுவனத்தில் அகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

4.2 பெறுகைகள் திட்டம்

-----------------------------------

மீளாய்வாண்டின் போது ரூபா 20,284,560 இற்கான மூலதனச் செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் உப பந்தி 4.2 இன் பிரகாரம் வருடாந்த பெறுகைகள் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

-------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பீட்டு வருமானங்கள் மற்றும் செலவுகள், உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவுகளுடன் இணக்கஞ் செய்யும் போது 06 வருமான விடயங்களில் நூற்றிற்கு 15 முதல் நூற்றிற்கு 81 வரையும், 06 செலவு விடயங்களில் நூற்றிற்கு 07 முதல் நூற்றிற்கு 100 இனை மிகைத்தும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு பயன்தரு கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஆ) 02 வருமான விடயங்களில் மதிப்பீட்டு வருமானம் மற்றும் உள்ளவாறான வருமானத்துடன் ஒப்பீடு செய்யும் போது ரூபா 11,597,641 தொகை குறைவாக வருமானம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) ஒப்பந்த நிருவாகம்